மாவட்டங்களிலே அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் இல்லையோ, அந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செய்திருக்கிறோம். இங்கே இருக்கிற 234 தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களுமே, தங்கள் தொகுதிக்கு அரசுக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்து, வருங்காலங்களிலே அவை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

94—

கட்டட வசதி

***45060—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையைப் படிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் கருத்துரு இருக்கிறது. இடம் கிடைத்தவுடன் கட்டடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துரு இருக்கிறது என்று சொன்னதற்காக மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பழனி, ஆயக்குடி பேரூராட்சிக்குச்

2010 ஏப்ரல் 26]

சொந்தமான சர்வே எண் 190-இல் 3½ ஏக்கர் நிலமும், கோதைமங்கலம் ஊராட்சிக்குச் சொந்தமான சர்வே எண் 389 இல் 1½ ஏக்கர் நிலமும், பூமிதானத்திற்குச் சொந்தமான இடமும் இருக்கிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைத்து, கடிதம் எழுதியிருக்கிறேன். அதில் ஏதாவது, ஒன்றைத் தேர்வு செய்து அந்த இடத்தில் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி, தாராபுரம் பிரதான சாலையில் பழனியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பஞ்சாயத்துத் தீர்மானம் போட்டு 2½ ஏக்கர் நிலம் நம்முடைய போக்குவரத்துத் துறை அலுவலகத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால், அதில் சில தனியார்கள் ஆக்கிரமித்துக்கொண்டதால் அது D.R.O. விசாரணையில் இருக்கிறது என்கிற காரணத்தால், D.R.O. விசாரணை முடிந்து, இடம் கிடைத்துவிடும் என்றால் உடனடியாக இந்த ஆண்டே அங்கே கட்டடம் கட்டுவதற்கான பணி தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உரிய முறையில் மாவட்ட வருவாய் அலுவலரைத் தொடர்பு கொண்டு இந்த இடம் விரைவில் கிடைப்பதற்கு உறுதி செய்வார்களேயானால் அது சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவந்திருக்கின்றேன். வால்பாறையில் உள்ள லாரி, கார், டெம்போ, வேன், பைக் போன்றவற்றை renewal செய்வதற்குக்கூட பொள்ளாச்சிக்கு வரவேண்டும். 65 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதனால் தேயிலைத் தோட்டத்

தொழிலாளர்களுடைய ஒரு நாள் வேலை பாதிக்கப்படுகிறது. ஆகவே, வால்பாறையில் போக்குவரத்துக் கிளை அலுவலகம் அல்லது renewal செய்வதற்காகவே ஒரு அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் செய்து தருவதாக அறிவித்திருந்தார்கள். அதைச் செய்து தருவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியின் பேரில் இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் சரக அலுவலகங்கள் புதியதாக நான்கும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் 15-ம், பகுதி அலுவலகங்கள் 19-ம், ஆக 38 அலுவலகங்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நடைமுறை என்னவென்றால், வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், துணைப் போக்குவரத்து அலுவலகமும்தான் இதுவரையில் இருந்து வருகின்றது. துணைக்குத் துணையாக ஒரு அலுவலகத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இருக்கின்ற தூரத்தைக் கணக்கிட்டு அங்கு அலுவலகம் அமைக்க முடியுமா என்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதி பெறவேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது, புதிய பகுதி அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றால் அங்கு போக்குவரத்து வாகனங்கள் அதிகமாக இருக்க வேண்டும். அங்கு போக்குவரத்து வாகனங்கள் தேவையான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் புதிய அலுவலகங்கள் அமைக்க இயலவில்லை. இருந்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பகுதி, மலைப் பகுதி என்ற காரணத்தால் அதில் சிறப்புக் கவனம் எடுத்துக்கொள்ளப்படும்.*

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*